ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2323/24 - 2023 මාර්තු මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.03.16

*2323/24 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 420)**

அரசியலமைப்பின் 44ஆவது உறுப்புரையின் 2ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 54ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 55ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதியும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரும்.

கொழும்பு,
*2023, மாச்சு 16.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் “2023 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (தகவல்களை வெளிப்படுத்துகை) ஒழுங்குவிதிகள்” என எடுத்துக் காட்டப்படலாம்.

2. நிதி அமைச்சின் செயலாளர், பொதுப்படுகடன் உறுதித்தன்மை தொடர்பான ஆலோசனையினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக, பொதுப்படுகடன் பதிவாளர் (இதனகத்துப் பின்னர் “பதிவாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்), இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள ஆளொருவருக்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் படுகடன் சாதனத்தின் வழங்கல், உடமை, மீள்கொடுப்பனவு மற்றும் தொழிற்பாடுகள் அத்துடன் அதனுடன் தொடர்புடைய விடயம் அல்லது தகவல் தொடர்பில் தகவல்களை வழங்குவதை விதந்துரைக்கின்றவிடத்து, பதிவாளர், அத்தகைய


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஆள் மூலம் கோரப்படக்கூடியவாறான, அத்தகைய படுகடன் தொடர்பில் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் எதுவாயினும் வடிவத்தில் வைத்திருக்கப்படுகின்ற அல்லது பேணப்படுகின்ற ஏதேனும் பதிவேடு, புத்தகம் அல்லது வேறு ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட அல்லது உள்ளடக்கப்பட்ட அத்தகைய தகவல்களை வெளியிடுதல் வேண்டும், ஆயின், பதிவாளர், அத்தகைய தகவல்களைப் பெறுகின்ற ஆள் தகவல்களைக் கடுமையான இரகசியத்தன்மையுடன் பேணுவது தொடர்பிலும் அத்தகைய ஆலோசனைகளை வழங்குவது தொடர்பில் ஈடுபட்டுள்ள அத்தகைய ஆளினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்கு அத்தகைய தகவல்களை வெளிப்படுத்துவதில்லை என்பது தொடர்பிலும் இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றினைச் செய்கின்றார் அல்லது ஏற்கனவே செய்துள்ளார் என்பது தொடர்பில் திருப்தியடைய வேண்டும்.

3. மேலேயுள்ள 2ஆவது ஒழுங்குவிதியின் நியதிகளுக்கமைய, தகவல்கள் எந்த ஆளுக்கு வெளிப்படுத்தப்பட்டதோ அந்த ஆள், பொதுப்படுகடன் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்தும் நோக்குடன் உள்நாட்டுப் பொதுப்படுகடன் தொழிற்பாடுகளைக் கண்டறியும் நோக்கத்திற்கு அவசியமானவை என்ற ரீதியில் அத்தகைய தகவல்களைப் பெற்றுப் பரிசோதித்துக் கொள்ளலாம்.

4. மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களின் வெளிப்படுத்துகை, பெறுகை அத்துடன் பரீட்சிப்பு மூலம் ஆற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொது நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, இது தொடர்பில் எவரேனும் ஆள் மூலம் கட்டணங்கள் எதுவும் செலுத்தப்படலாகாதிருத்தல் வேண்டும்.

EOG 06-0084